ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2400/25 - 2024 සැප්තැම්බර් මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.09.05

*2400/25 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்***

*14 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் 14 ஆவது பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இந்த கட்டளையினை ஆக்குவதன் மூலம்;*

*1.* *இணைபு முறைக் குறியீடுகளின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள பொருட்கள்/பண்டங்கள் தொடர்பாக அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பிடப்பட்டுள்ள செஸ் அறவீட்டு விகிதத்தை, அத்தகைய பொருட்கள்/பண்டங்களை இறக்குமதி செய்யும் போது, குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிரல் II மற்றும் III இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2024, செத்தெம்பர் 06 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் விதித்தல்.*

*1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ், 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதிய 2336/71 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை 2024, செத்தெம்பர் 06 முதல் அமுலுக்கு வரும் வகையில் இதன்மூலம் இரத்துச் செய்யப்படுகின்றது.*

1A - PG 6864 — 429 (2024/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அட்டவணை

| இ. மு. தலைப்பு (I) | இ. மு. குறியீடு (II) | | விபரம் (III) | செஸ் விகிதம் (IV) |
|---|---|---|---|---|
| 25.23 | | | **போர்ட்லேண்ட் சீமெந்து, அலுமினியஸ் சீமெந்து, ஸ்லாக் சீமெந்து, சுப்பரசல்பேட் சீமெந்து மற்றும் ஒத்த ஹெட்ராலிக் சீமெந்து, நிறத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அல்லது கிளிங்கர் வடிவில் இருந்தாலும்.** | |
| | | | | |
| | | - | போர்ட்லேண்ட சீமெந்து: | |
| | 2523.21 | -- | வெள்ளை சீமெந்து, செயற்கையாக நிறத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் | கி. கி. ஒன்று 4.00 ரூபா |
| | 2523.29 | -- | ஏனைய: | |
| | 2523.29.10 | -- | நீர்ப்புகா சீமெந்து, கொதிகலன் சீமெந்து மற்றும் ஒத்த கலவைகள். | கி. கி. ஒன்று 4.00 ரூபா |
| | 2523.29.20 | -- | ஏனைய போர்ட்லேண்ட் சீமெந்து 50 கி. கி. மற்றும் அதற்குக் குறைவான பொதிகளில் இறக்குமதி செய்யப்படுகிறது. | கி. கி. ஒன்று 7.00 ரூபா |
| | 2523.29.30 | -- | ஏனைய போர்ட்லேண்ட் சீமெந்து 50 கி. கி. இற்கு மேல் அல்லது மொத்தமாக பொதிகளில் இறக்குமதி செய்யப்படுகிறது. | கி. கி. ஒன்று 4.00 ரூபா |
| | 2523.90 | - | ஏனைய ஹைட்ராலிக் சீமெந்து | கி. கி. ஒன்று 4.00 ரூபா |

ii. 2024, ஓகத்து 12 ஆந் திகதிய 24/0105/622/002 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் முடிவின்படி, 2024, மே 21 மற்றும் 2024, யூலை 29 ஆந் திகதிய "கட்டுப்படுத்தப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பாறைக் கற்களை ஏற்றுமதி செய்வதன் மூலம், அந்திய செலாவணி வருமானத்தை அதிகாரிக்கவும், சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சமூகங்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தவும் இலங்கைக்கு ஒரு வாய்ப்பை வழங்குதல்" என்ற தலைப்பிலான அமைச்சரவைக்கான குறிப்புகளுடன் ஒன்றாக வாசிப்பதன்படி, 2516.11.00 இயைபு முறைக் குறியீட்டின் கீழ் வகைப்படுத்தக்கூடிய, ஒரு மில்லியன் மெட்ரிக் தொன் பாறைக் கற்களை [கட்டுமான நோக்கங்களுக்காக ஏற்றுமதி செய்யப்படும் கற்பாறைகள் (Charnockite and Gneisses)] ஏற்றுமதி செய்யும் போது, சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில் 2024, செத்தெம்பர் 06 முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒரு கன மீற்றருக்கு (m3) ரூபா 1000.00 என்ற விகிதத்தில் செஸ் வரி விதிக்கப்பட்டு அறிவிடப்படும். 2516.11.00 இயைபு முறைக் குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்படும் கிரனைட்டின் அனைத்து ஏற்றுமதிகளுக்கும், 2021, சனவரி 12 ஆந் திகதிய 2210/09 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களில் செஸ் வரி விதிக்கப்பட்டு அறவிடப்படும்.

**ரணில் விக்ரமசிங்க,**
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்.

முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்,
2024, செத்தெம்பர் 05.

EOG 09 - 0056

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.